இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

கலைஞர் 100 1924 - 2024

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 334 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 30 – திங்கள்கிழமை 14 ஜூலை 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 334 : Thiruvalluvar Year - 2056 - Aani 30 - Monday 14 July 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கைத் திட்டம்!

# விறுவிறுவென இதுவரை 77,34,937 பேர் இணைந்துள்ளனர்!



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை (War Room) திறந்து வைத்து, நமது 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் செயல்பாட்டை ஆய்வு செய்தார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 14–**

**"ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கைத் திட்டம் விறுவிறுவென நடைபெற்று இதுவரை 77,34,937 பேர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்" என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

நமது 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக இணைய விருப்பமுள்ளதா என்று கேட்கும்போது, "அரசின் திட்டங்கள் அன்றாட வாழ்விலும், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பயனளிக்கிறது. அதேசமயம் அ.தி.மு.க. பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள கூட்டு என்பது, கூட்டணியல்ல; தமிழ்நாட்டை தமிழ்நாட்டின் ஒற்றுமையைச் சிதைத்து, மீண்டும் நூறாண்டுகளுக்குப் பின்னோக்கித் தள்ளுவதற்கான சதித்திட்டம் என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம்" என்று தெளிவாக எடுத்துச் சொல்லி ஓரணியில் தமிழ்நாடு என இணைகின்றனர் தமிழ்நாட்டு மக்கள்!

இந்த முன்னெடுப்பைக் கண்காணிப்பதற்காக அண்ணா அறிவாலயத்தில் DMKITwing அமைத்துள்ள "War Room"ஐத் திறந்து வைத்தேன்.

விறுவிறுவென நடைபெற்று வரும் 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரையில் இதுவரை 77,34,937 பேர் (49,11,090 புதிய உறுப்பினர்கள்) தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

### கரூர் மாவட்டம் முன்னணி!

அதிகபட்சமாக, கரூர் மாவட்டக் கழகத்தினர் 41% வாக்காளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து முன்னணி வகிக்கின்றனர். அவர்களை முந்தும் வகையில் பிற மாவட்டக் கழகத்தினரும் மும்முரம் காட்டிடக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அளிக்காத ஒன்றிய அரசின்

## தேசிய கல்விக் கொள்கை மக்களின் விருப்பங்களுக்கு எதிராக உள்ளது!

### 'தி இந்து' ஆங்கில நாளிதழ் தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 14–

'English dreams: On language debate and English medium education' எனும் தலைப்பில் "தி இந்து' ஆங்கில நாளிதழ் தலையங்கம் வெளியிட்டுள்ளது. அதில், ஆங்கில வழிக் கல்வி இந்தியர்களின் ஒரு விருப்பமாக உள்ளதாகவும், ஆனால் கற்பித்தல் மொழி தொடர்பான கொள்கை,

நாடு முழுவதும் சீரற்றதாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் காரணமாக எழுந்துள்ள விவாதத்தில் பயிற்று மொழியும் ஒன்று என "தி இந்து" தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்மொழிக் கல்வி, குழந்தைகளின் ஆரம்பகால வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதை கல்வியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் இதனை கல்வியியல் ஆராய்ச்சி உறுதி செய்துள்ளது பயிற்று மொழியை தேர்வு செய்வது அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமை இதனை மறுக்கும் உரிமை ஒன்றிய அரசுக்கு இல்லை என்று "தி இந்து' ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

ஒன்றிய அரசு தீவிரமாக முன்னெடுக்கும் தேசிய கல்விக் கொள்கை, ஆங்கில எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும், இது மக்களின் விருப்பங்களுக்கு எதிரானது என்றும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. தங்களின் பிராந்திய மொழி மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்க விரும்பும் மாநிலங்கள், ஆங்கிலக் கல்வியையும், ஆங்கிலத்தை ஒரு பயிற்று மொழியாகவும் ஊக்குவிக்க விரும்புவதாகவும், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவில் அரசு உதவி பெறும் ஆங்கில வழிப் பள்ளிகள் உள்ளதாகவும், ஆங்கில வழிக் கல்விக்கான தேவை இந்தி பேசும் மாநிலங்களிலும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள "தி இந்து தலையங்கம், பெரும்பாலும் தரமற்ற மற்றும் அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் நிறுவனங்கள் இதன் மூலம் பயன்பெறுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ளது.

உலகளாவிய சேவைத் துறைகளில் தனிநபர்களும் நாடுகளும் தங்களுக்கான இடத்தை பெறுவதில் ஆங்கிலத் திறன் உதவி உதவுகின்றன இந்தியாவில், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆங்கிலக் கல்வி மூலம் தங்களுக்கான அதிகாரத்தை பெறவும், முன்னேற்றத்திற்கான கருவியாக உள்ளது என்று தி இந்து தலையங்கம் தெரிவித்துள்ளது. அரசுப் பள்ளிகள் ஆங்கில வழிக் கல்வியை வழங்கவில்லை என்றாலும், வசதி படைத்த குடும்பங்கள் தனியார் பள்ளிகள் மூலம் அதனை பெறும் நிலை உள்ளதாகவும், இதன் காரணமாக கல்வி என்பது சமூக ஏற்றத்தாழ்வுகளை மேலும் மோசமாக்கும் என்றும், இது சமூக நலன்களுக்கு நேர் எதிரானது எனறும் இத்தலையங்கம் தெரிவித்துள்ளது.

ஆங்கில அறிவு, அதிகாரம் அளிப்பதற்கும், முன்னேற்றத்திற்கான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், ஆரம்பக் கல்வி நிலையில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமா என்பது குறித்து விவாதம் தேவை என்றும் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம், மிகவும் பின்தங்கிய பிரிவு மக்கள், அவர்களின் லட்சியங்களையும், முன்னேற்றத்தையும் அடைவதற்கு உதவும் வகையில் அரசுகளின் கொள்கைகள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

### செஞ்சிக்கோட்டை 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிப்பு!

## தமிழ்நாட்டுக்கும் - அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணம் இது!


### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, ஜூலை 14–

செஞ்சிக் கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "தமிழ்நாட்டுக்கும் – அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத்தருணம், இது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:–



**'கிழக்கின் ட்ராய்' என அறியப்படும் செஞ்சிக்கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**சோழர் கோயில்கள், மாமல்லபுரம், நீலகிரி மலை இரயில், மேற்குத் தொடர்ச்சி மலை ஆகியவற்றின் வரிசையில் தமிழ்நாட்டில் இருந்து கம்பீரமான செஞ்சி மலைக்கோட்டை இப்பட்டியலில் தற்போது இணைந்துள்ளது.**

**தமிழ்நாட்டுக்கும் அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணமாக இது அமைந்துள்ளது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

### "உடன்பிறப்பே வா"! கழக நிர்வாகிகளுடன் முதலமைச்சர் –

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்தாலோசனை தொடர்ந்து நடைபெறுகிறது!

### தனித்தனியாக நிர்வாகிகளுடன் ஆலோசனை!

**சென்னை, ஜூலை 14 -**

**"உடன்பிறப்பே வா" கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து தனித்தனியாக 3 தொகுதிகளைச் சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்.**

"ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பு குறித்தும் நிர்வாகிகளிடமும், ஒவ்வொரு வாக்குச்சாவடியில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கை குறித்தும் ஆய்வு நடத்தினார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உடன்பிறப்பே வா' எனும் தலைப்பில் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை, தனித்தனியாகச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இந்த சந்திப்பின்போது, கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்நிலையில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த கட்சியின் நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் பூத் அளவிலான உறுப்பினர் சேர்க்கை குறித்தும் முதலமைச்சர் ஆய்வு செய்தார். தொகுதிகளின் புள்ளி விவரங்களை கையில் வைத்துக் கொண்டு ஒன்றியச் செயலாளர்களிடம் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் குறித்த விவரங்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

### "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணிகள்!

இதனிடையே, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

அண்ணா அறிவாலயத்தில் செயல்படும், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் அலுவலகத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" பணிகள் குறித்து முதலமைச்சர் கேட்டறிந்தார்.

நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவரும், கழகத் துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி உடனிருந்தார்.

மேலும், கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச்செயலாளர் அன்பகம்கலை, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில், திண்டுக்கல், வேப்பனஹள்ளி, வேடசந்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.